**Starting time 11.48 A.M.**

**<u>IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT MUNSIF, ATTUR</u>**

**O.S. No. 221/2015**

Deposition of **P.W.3** witnesses for Plaintiff/Defendant Solemnly affirmed by Tmt. K. Janaki, Gr. III Bench Clerk of this court, on 18.12.2023 in accordance with the provisions of Act 1 of 1873.

| | | | |
|---|---|---|---|
| Name | : மனோகரன் | Father's Name | : |
| Village | : | Taluk | : |
| Caste | : | Religion | : |
| Calling | : | Age | : |

<u>1,3 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை :</u> நான் என்ன வேலை பார்க்கிறேன் என்றால், விவசாயம். நான் எத்தனை வருடங்கள் வெளிநாட்டில் வேலை பார்த்தேன் என்றால், 10 வருடங்கள். தாவா சொத்திற்கு அருகில் எனக்கு வீடு இல்லை என்றால், இரண்டு தெரு தள்ளிதான் இருக்கிறது. என்னுடைய நிரூபண வாக்குமூல சங்கதிகள் குறித்து தெரியுமா என்றால், தெரியும். தாவா முதலின சொத்தின் புல எண், விஸ்தீரணம் என்ன அதில் எவ்வளவு விஸ்தீரணத்தில் வீடு கட்டப்பட்டது போன்ற விவரங்கள் எனக்கு தெரியுமா என்றால், தெரியாது.

2. சுப்பராய உடையாரின் 1950 ஆண்டிற்குரிய கிரயபத்திரத்தில் நான் சாட்சி கையொப்பம் இட்டுள்ளேனா என்றால், இல்லை. அந்த பத்திரங்களின் விவரம் எனக்குதெரியுமா என்றால், தெரியாது. 23.03.1978 தேதியிட்ட தடப்பாத்திய முச்சலிக்கையிலும் நான் சாட்சி கையொப்பம் போடவில்லை என்றாலும், அந்த பத்திரம் பற்றிய விவரம் எனக்கு தெரியாது என்றாலும், சரிதான். தாவா இரண்டாவது இன சொத்தின் புல எண் மற்றும் நீளம், அகலம் எனக்கு தெரியுமா என்றால், நீளம் அகலம் தெரியும். புல எண் தெரியாது. நீளம் அகலம் எவ்வளவு என்றால், நீளம் 80 அடி, அகலம் 11 அடி.

3. தாவா 2-வது இன சொத்து யார் பெயரில் உள்ளது என்றால், தங்கவேல் பெயரில் உள்ளது.

அந்த பத்திரத்தை படித்துப் பார்த்துள்ளேனா என்றால், பார்த்துள்ளேன். பதிவு செய்யப்பட்ட பத்திரம்தான். அந்த பத்திரத்தை நீதிமன்றத்தில் ஒப்படைத்துள்ளாரா என்றால், ஒப்படைத்துள்ளார். தாவா 2-வது இன சொத்தின் வருவாய் ஆவணங்கள் யார் பெயரில் உள்ளது என்றால், தங்கவேலின் அப்பா பெயரில் உள்ளது. தாவா 2-வது இன சொத்தின் கிழக்கிலும், மேற்கிலும் யார் சொத்து உள்ளது என்றால், கிழக்கில் அப்பாவு, சரசு, கோபால், பொன்னம்மாள் மேற்கில் ராஜேந்திரன் சொத்தும் உள்ளது.

4. தாவா 2-வது இன சொத்து சந்திற்கு செல்வதற்கு குப்புசாமி ரெட்டியார் மற்றும் பொன்னம்மாள் வீட்டிற்கு செல்வதற்கு வாசற்படி கிழக்கு பக்கம் உள்ளது என்றால், பொன்னம்மாள் வீட்டில் இல்லை, குப்புசாமி வீட்டிற்கு சுண்ணாம்பு அடிப்பதற்காக 1 அடி விட்டுள்ளார்கள். அவர்கள் வீட்டிற்கு கிழக்கில் ராஜவீதியில் வாசற்படி உள்ளது. மேற்படி சங்கதிகளை என்னுடைய சாட்சிய பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேனா என்றால், இல்லை. தாவா 2-வது இன சொத்தின் வருவாய் ஆவணங்கள் காலி இடமாகத்தான் உள்ளது என்றால், இல்லை.

5. தாவா 2-வது இன சொத்தான சந்தைதான் கோபால், குப்புசாமி ரெட்டியார், பொன்னம்மாள், ராஜேந்திரன் ஆகியோர் தங்கள் வீடுகளுக்கு செல்ல சந்தாக பயன்படுத்தி வருகிறார்கள் என்றால், இல்லை. ராஜேந்திரன் வீட்டிற்கு மேற்கில் கோபால் வீட்டிற்கு செல்வதற்கு சந்து இருக்கிறது. தாவா 2-வது இன சொத்து சந்தின் மூலம் கோபால் வீட்டிற்கு செல்லமுடியும் என்றால், செல்ல முடியாது. தாவா 2-வது இன சொத்திற்கு ஒட்டினார்போல் மேற்குபுறத்தில் கோபால் வீடு இருக்கிறது என்றால், ஆமாம். தாவா 2-வது இன சொத்திற்கு மேற்குபுறத்தில் ராஜேந்திரன் என்பவரின் வீடு இருக்கிறது என்றால், ஆமாம். முன்புறத்தில் கடை கட்டியுள்ளார்கள். பின்புறத்தில் காலியாக உள்ளது.

6. அந்த காலி இடத்திற்கு தாவா 2-வது இன சொத்தின் வழியாகத்தான் செல்லவேண்டும் என்றால், முன்புறம் கட்டியுள்ள பகுதிக்கு பின்புறத்தில் வாசற்படி வைத்துள்ளார்கள், அதன் வழியாகத்தான் செல்ல முடியும். அந்த காலியிடத்திற்கும் தாவா 2-வது இன சொத்திற்கும் இடையே சுவர் எதுவும் இல்லை என்றால், ஆமாம். அந்த பகுதி ஒரே காலியிடமாகத்தான் இருக்கிறது என்றால், ஆமாம். தாவா 2-வது இன சொத்தின் வழியாக ராஜேந்திரன் வீட்டு

பின்புற காலியிடத்திற்கு செல்ல முடியும் என்றால், முடியாது. கோபால் வீட்டு பத்திரத்தை பார்த்துள்ளேனா என்றால், இல்லை.

7. அவருடைய ஆவணத்தின்படி அந்த வீட்டிற்கு எந்த பக்கத்தில் தடம் இருக்கிறது என்று எனக்கு தெரியாது என்றால், ஆமாம். தாவா முதல் இன சொத்திலிருந்து தென்புறமாக கிழமேலாக ராஜவீதி செல்வதற்கு 6 அடி சந்து உள்ளது என்றால், இல்லை. வருவாய் ஆவணத்தில் சந்தாக அது காட்டப்பட்டுள்ளது என்றால், ஆமாம். அந்த சந்து தாவா 2வது இன சொத்து வரையிலும் செல்கிறது என்றால், 20 மீ கூரை வாரி போட்டுள்ளார்கள். நீதிமன்ற ஆணையர் சொத்தை வந்து பார்த்த விவரம் எனக்கு தெரியுமா என்றால், தெரியாது. தாவா 2-வது இன சொத்திலிருந்து குப்புசாமி வீட்டிற்கு செல்ல வழி இருப்பதாக நீதிமன்ற ஆணையர் சொல்லியுள்ளார் என்றால், அவ்வாறு வழி இல்லை.

8. தாவா 2-வது இன சொத்திற்கு கிழபுறத்தில் உள்ள பொன்னம்மாள் வீடு உள்ளது. தாவா 2-வது இன சொத்திற்கு கிழபுறம் முதலில் காலியிடமும், அதற்கடுத்ததாக வீடும் உள்ளது என்றால், கிழக்கில் ராஜவீதி பக்கமாக வீடு உள்ளது அந்த வீட்டிற்கு மேற்கு புறம் காலி மனை உள்ளது. அந்த வீட்டிலிருந்து காலிமனைக்கு செல்வதற்கு கதவு வைத்துள்ளார்கள் என்றால், ஆமாம். அந்த வீதியிலிருந்து பொன்னம்மாள் வீட்டிற்கு வருவதற்கு தடுப்பு சுவர் எதுவும் இல்லை என்றால், ஆமாம்.

9. தாவா முதல் இன சொத்திற்கு தாவா 2-வது இன சொத்தின் வழியாகத்தான் வாதி செல்ல முடியும் என்று வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால், சரியல்ல. தாவா 2-வது இன சொத்தும், வாதிக்கு மட்டுமே பொய்யாகசொல்கிறேன் என்றால், சரியல்ல. ஆணையர் அறிக்கையிலேயே அது வண்டிப்பாதையாகத்மதான் காட்டப்பட்டுள்ளது என்றாலும், அது நத்தம் நிலம் என்பதால் இருபக்கத்திலும் இருக்கும் வீடுகளுக்கு செல்லும் பாதையாகத்தான் இருக்கிறது என்றால், சரியல்ல.

10. தாவா 2-வது இன சொத்து பொது பாதை என்பதால் அனைவருக்கும் அதில் உரிமை உண்டு என்றாலும், அது வாதிக்கு மட்டுமே உரிமையானது என்று நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல. தாவா முதல் இன சொத்திற்கு தென்புறத்தில் 6 அடி அகலுமள்ள சந்துள்ளது என்றாலும், அதன் வழியாக வாதி சென்று வரலாம் என்றாலும்,

சரியல்ல. தாவா 2-வது இன சொத்து வாதிக்கு மட்டுமே சொந்தமானது என்று வாதி கேட்டுக் கொண்டதற்கிணங்க பொய் சாட்சியம் சொல்கிறேன் என்றால், சரியல்ல.

1,3 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை முழுவதும் முடித்துக்கொள்வதாக தெரிவிக்கப்பட்டது.

வாதிகள் தரப்பில் மறு விசாரணை இல்லை.

Ending Time: 12.12 P.M.

(ஒப்பம்/- N. திலகேஸ்வரி)
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி (மு.கூ.பொ.), ஆத்தூர்.